Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.6/2025

Dated 23-02-2026
Deposition of witness for : PW 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரவின்குமார் | வயது | : | 29 |
| தந்தை பெயர் | : | பாபு | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | வடக்குவாசல் | தொழில் | : | மேனேஜர் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

All **Accused present**

Ld. D. **Counsel Present**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC No. 74663/2024 /F1/dt.21.2.2025 the Identity of the witness verified with their Identity card.**

**Aathar card of the Witness verified.**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசிக்கிறேன். ஆஜர் எதிரிகள் நால்வரையும்

எனக்கு தெரியாது.

2)இறந்து போன அற்புதம் என்பவரையும் எனக்கு தெரியாது.

3) நான் எதையும் பார்க்கவில்லை.

4)இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1) போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அப்போது 20.5.2024 ம் தேதி இரவு சுமார் 9.30 மணியளவில் என்னுடைய வீட்டு வாசலில் நின்று கொண்டிருக்கும்போது ஜான்பிரிட்டோ பள்ளி அருகில் சிரேஸ் சத்திரம் ரோட்டில் வசிக்கும் அற்புதம் அவரதுமனைவி சுபார் ஆகியோர் தலையில் கையை வைத்துக்கொண்டு வந்துகொண்டிருந்தார்கள் என்றும்,

2) அவர்களுக்கு பக்கத்தில் அவரது பேத்தி சந்திரலேகா நடந்துவந்துகொண்டிருந்தார் என்றும் அற்புதம் கையில் ஒரு அருவாள் வைத்து கொண்டிருந்தார் என்றும் அப்போது ஒரு நீல நிற இருசக்கர வாகனத்தில் வந்த நான்கு நபர்களின் வந்தவர்கள் மூவர் வண்டியில் இருந்து இறங்கி இரண்டு நபர் அற்புதத்தை மறித்து அருவாளால் காலிலும் பின்னர் தலையில் மாறி மாறி வெட்டினார்கள் என்றும்.

3) வெட்டி தலையை சிதைத்தார்கள் என்றும் அப்போது சக்திவேல் என்பவரது தங்கச்சி

பையன் அருண் மற்றும் MGR நகர் சத்தியசீலன் பக்கத்தில் நின்று வெட்டுங்க வெட்டுங்க என்று சொன்னார்கள் என்றும் நான் உடனே எல்லோரும் ஓடி வாங்க என்று சத்தம் போட்டேன் என்றும் பின்னர் 108 ஆம்புலன்சில் அற்புறதம் பிரேதத்தை ஏற்றி சென்றார்கள் என்றும் சொல்லி விட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/ P.வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்